
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

**Translated from the LHMM Booklet**


பொருளடக்கம்

# மரித்தோர் எங்கே?

**நமது அன்பர்கள், நமது அயலகத்தார்: நல்லார், பொல்லார், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலானோர் எங்கே இருக்கிறார்கள்?**

BS Tamil Version - 26

2014




# மரித்தோர் எங்கே?

## Where are the dead ?

**"சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்: அவன் மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்: அவனுடைய கல்லறை இந்நாள் வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது....... தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே (அப். 2 : 29, 34). "பரலோகத்திலிருந்திறங்கினவராகிய மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை." (யோவா. 3 : 13).**

நமது சிநேகிதர், நமது அயலகத்தார்; நல்லார் பொல்லார், உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவருமாகிய மரித்தோர் எங்கே? இந்தக் கேள்விக்குரிய பொருத்தமான விடையானது, நமது சொந்த முடிவிற்குச் சம்பந்தப்பட்டதாயிருந்து, நமது வேத சாஸ்திர அறிவையும் நமது ஜீவிய சரித்திரங்களின் முழுப் போக்கையும் விசேஷித்துக் காட்டி, அவைகளைச் செல்வாக் குள்ளதாக்குகிறது. ஆகவே பிழையற்ற உண்மையான விடை யானது பெலத்தையும் நம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுத்து, தெளிந்த புத்தியின் ஆவியை அடையும்படி செய்ய உதவுகிறது. இவ்விஷயத்தை ஆராய தனக்கு யாதொரு உரிமையும் விருப்பமும் இல்லை என ஒருவன் சொல்வது, அவன் தன்னைத்தானே புத்தியற்றவனாகக் காட்டுவதாக இருக்கும். சில வருஷங்களுக்கு மாத்திரம் நம்மோடு சம்பந்தப் பட்டிருக்கிற இந்த ஜீவியத்திற்குரிய (இம்மைக்குரிய) ஆகாரம், உடை, பணம், அரசியல் முதலியவைகளாகிய சாதாரண காரியங்கள் நமது ஆராய்ச்சிக்கும் கவனத்துக்கும் பாத்திர மானவைகளாக எண்ணப்படுகின்றன. இப்படிப்பட்டவைகளே இவ்விதமாக எண்ணப்படுமேயாயின், நமக்கும் நமது அயலகத்தாருக்கும், பொதுவாக மனுக்குலத்துக்கும் நித்திய காலமாய் சம்பந்தப்பட்டவைகளாகிய வருங்காலத்துக்குரிய சம்பவங்களைப் பற்றி (மறுமையைப்பற்றி) எவ்வளவோ அதிக ஜாக்கிரதையோடும் ஊக்கத்தோடும் நாம் ஒவ்வொருவரும் ஆராய்ந்தறியக் கடமைப்பட்டிருக்கிறோமென்பதை அறிந்து கொள்வோமாக.

## பிரபஞ்சத்தைப் பற்றியோ கடவுள் பற்றியோ எதையும் அறிய முடியாது என்னும் கருத்துடைய சந்தேகவாதிகளின் (agnostics) மறுமொழி

ஏதாவது ஒன்றைக் குறித்து, ஆராய்ச்சி செய்வதில் எவ்வித கட்டுப்பாட்டுக்குள்ளும் இராமல் சுயாதீனமாய் இருக்கிறோமென்று மேன்மை பாராட்டிக் கொள்கிற சுயாதீன சிந்தனைக்காரராகிய "சந்தேகவாதிகளிடம்" மரித்தோர் எங்கே? என்னும் கேள்வியைக் கேட்டால், அவர்கள் கூறும் மறுமொழி என்னவென்றால்; "எங்களுக்குத் தெரியாது. பிற்கால ஜீவியத்தில் நம்பிக்கை கொள்ளப் பிரியம் தான். ஆனால் அதற்குத்தகுந்த அத்தாட்சி இல்லை. ஆதலால் மனுஷன் மிருகத்தைப் போல் செத்து அழிந்தே போகிறான். எங்களுடைய இந்த நம்பிக்கையானது, பரிசுத்தவான்களுக்குப் பாக்கியமும் சந்தோஷமும் கிடைக்குமென்று நீங்கள் எதிர்பார்க்கிற நம்பிக்கைக்கு விரோதமானதாகக் காணப்பட்டாலும், மனுக்குலத்தில் பெரும்பான்மையானோருக்கு இது மிகுந்த ஆறுதலைக் கொடுக்கக்கூடியதாயிருக்கும்; ஏனெனில் அநேகர் நம்புவதுபோல, அவர்கள் நித்திய காலமாய் நரகத்தில் வேதனையடைந்து கொண்டிருப்பதைப் பார்க்கிலும் மிருகங் களைப்போல் அழிந்து மறக்கப்பட்டுப் போவது அதிக சிலாக்கியமும் உத்தமுமான காரியமாகும்" என்பதே.

கடவுள் பற்றி எதையும் அறிய முடியாது என்னும் கருத்துடைய சுயாதீன சிந்தனைக்காரராகிய 'சந்தேகவாதிகள்' (agnostics) கொடுத்த பதிலுக்காக நாம் அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். ஆனால் அந்த மறுமொழியானது நமது மனதுக்கும் உள்ளத்துக்கும் திருப்தியளிப்பதாக இல்லை; ஏனெனில் பிற்கால ஜீவியம் என்ற ஒன்று கட்டாயம் இருக்க வேண்டுமென நமது மனுஷ உள்ளமும் தெரிவிக்கின்றன; தேவ ஏற்பாட்டில் மனுஷன் முதன்மையானவன் என்பதை அவன் நம்பும்படி சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன், அவன் மிருகத்திற்கு மேலான மனோசத்துவங்களை உடையவனாயிருக்கும்படி அவனை உண்டாக்கினார். அன்றியும் பிற்கால மறுஜீவியம், அதாவது இந்த ஜீவியத்தின் அனுபவங்களை உபயோகப்படுத்தக் கூடிய ஓர் தகுந்த காலம் மனுக்குலத்திற்கு இல்லாமற் போகுமானால், இந்த ஜீவியத்தின் குறுகிய வாழ்நாளில் மனுஷன் அடையும் கண்ணீர், துக்கம், அனுபவம், போதனை முதலியவைகள் முற்றிலும் பிரயோஜனமற்றுப் போகுமென்பது உண்மை. ஆகவே நாம் நமது கேள்விக்கு இதைப் பார்க்கிலும் திருப்திகரமான மறுமொழியைத் தேட வேண்டும்.

## புறமதஸ்தரின் மறுமொழி

உலகத்தில் முக்கால்வாசிப் பேர் கிறிஸ்தவர்களல்லாத புறமதஸ்தரானபடியால் "மரித்தோர் எங்கே?" என்று அவர்களிடம் கேட்டால் இரண்டு வகையான மறுமொழிகள் பிறக்கின்றன;–

(1) அவர்களுக்குள் விசேஷித்தவர்கள் திரும்பத்திரும்பப் பிறக்குதலாகிய புனர் ஜென்மத்தில் நம்பிக்கை கொண்டவர் களேயாவர். அவர்கள் சொல்வது என்னவென்றால்;– "மனுஷன் சாகிறபோதே உண்மையில் அவன் சாகிறதில்லை, தன் உருவத்தை மாத்திரம், மாற்றிக்கொண்டு தற்கால ஜீவிய நன்மை தீமைக்கேற்ப, உயர்ந்த அல்லது தாழ்ந்த பிறப்பை அடைகிறான். நாங்கள் இச்சடலத்தை எடுக்கும் முன்னே, ஒருவேளை

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

பூனையாய், நாயாய், சுண்டெலியாய், புழுவாய் அல்லது யானையாய் பிறந்திருக்கலாம். தற்கால ஜீவியத்தை நன்கு உபயோகித்து, நன்மையையே செய்வோமானால், அடுத்த ஜென்மத்தில் தற்போதைய நிலைமையைவிட மேலான நிலைமையை உடையவர்களாய் பேர்பெற்ற ஞானிகளாக மறுபடியும் மனுஷராகப் பிறப்போம். ஆனால் தற்கால ஜீவியத்தை வீணாகச் செலவு செய்து தீமையை நடப்பிப் போமானால், மரணத்திற்குப் பின் திரும்பவும் யானையாகவோ, கீழான நிலையிலுள்ள பிராணியாகவோ பிறப்போம். இதன் காரணமாகவே நாங்கள் அற்பப் பிராணிகளையுங்கூட இம்சிக்காமல் அனைவரிடமும் தயைதாட்சணியம் காட்டுகிறோம்; எவ்விதமான மாம்சமும் புசிப்பதில்லை. பிராணிகளைக் கொடுமையாய் நடத்தினால் மரணமாகிய மாறுதலையடைந்த பின் தாங்களும் அவ்விதமாகவே நடத்தப்படத்தக்கதாக ஓர் பிராணியின் உருவத்தை அடைவதே எங்களுக்குரிய தண்டனையாயிருக்கும்" என்பதே புறமதஸ்தர்களில் ஓர் வகுப்பினரின் மறுமொழியாகும்.

(2) புற மதஸ்தர்களுள் வேறு அநேகர் நம்புவது என்னவென்றால் ;- "நல்லவர்களாக ஜீவித்து மரித்தவர்கள் யாவரும் ஆவிகள் வசிக்கிற உலகத்திற்குப் போய் அங்கே உல்லாசமாய் வாழுவார்கள் என்றும், பொல்லாதவர்களோ பற்பலவிதமான வேதனைகளை அடையக் கூடிய நரகத்திற்குப் போவார்கள் என்றும், மனுஷர் சாகிறபொழுது மரிக்கிறவர்களாகத் தோன்றுகிறார்களேயன்றி உண்மையில் அவர்கள் மரண மடையாமல் முன்னிலும் அதிகமான உயிரை அடைகிறார்கள் என்றும், ஸ்ற்றிக்ஸ் (விரஜா) என்னும் மரண நதியைக் கடந்த அதே நிமிஷத்திலேயே தங்கள் ஜீவியத்தின் பலனைப் பெற்று ஆசீர்வாதம் நிறைந்த உலகத்துக்கோ, அல்லது சதா காலமும் வேதனை அனுபவிக்கும் உலகத்துக்கோ, போகிறார்கள் என்றும், தற்கால ஜீவியத்திற்குத் தக்கபடி அந்தந்த இடத்திலே அவர்கள் பற்பல அளவான இன்பங்களையோ துன்பங்களையோ அனுபவிக்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள்" என்பதே புறமதஸ்தர்களின் இரண்டாவது வகையான மறுமொழியாகும்.

"மரித்தோர் எங்கே?" என்னும் நமது கேள்விக்கு புறமதஸ்தர் கொடுக்கும் மறுமொழியானது நமது மனதுக்கும் உள்ளத்துக்கும் திருப்தியளிப்பதாய் இல்லை. ஆகவே நாம் இதிலும் மேலான ஆராய்ச்சியைத் தேட வேண்டும். நாம் மனுஷருடைய சொந்த யூகங்களில் நம்பிக்கை வைக்கக் கூடாது. நாம் நமது சிருஷ்டி கர்த்தாவாகிய தேவனோடு சம்பந்தம் வைக்க வேண்டியவர்கள்; ஆதலால் அவரிடமிருந்து இவ்விஷயத்தைப் பற்றி நமக்குக் கிடைக்கக்கூடிய சத்தியம், அதாவது தேவனுடைய வெளிப்படுத்தல் என்ன என்று தான் நாம் ஆராய்ந்தறிய வேண்டும்.

## கத்தோலிக்கரின் மறுமொழி

உலக ஜனத்தொகையில் கால் வாசிப்பேரான தேர்ச்சி பெற்றுள்ள கிறிஸ்தவ மண்டலத்தினரிடம் நாம் இப்பொழுது நமது கேள்வியைக் கேட்போம். கிறிஸ்தவ மண்டலத்தினரே! "மரித்தோர் எங்கே?" என்னும் கேள்விக்கு உங்கள் மறுமொழி என்ன? இவர்களிடமிருந்து கிடைக்கும் பதில் என்னவென்றால்;- "நாங்கள் எங்களுக்குள்ளேயே அபிப்பிராய பேதமுடையவர்கள்; எங்களில் மூன்றில் இருபங்குக்கு மேற்பட்டவர்கள், ரோமன் - கிரேக்க கத்தோலிக்கரின் அபிப்பிராயங்களையும் ஏறக்குறைய மூன்றிலொரு பங்குப் பேர் புரோட்டெஸ்டண்ட் சபையாரின் அபிப்பிராயங்களையும் உடையவர்கள்" என்பதேயாகும். வயதிலும் தொகையிலும் கத்தோலிக்கர் முந்தினவர்களாயிருப் பதால், நாம் முதலாவது அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்போம்.

கத்தோலிக்கரான சிநேகிதரே! மரித்தோர் எங்கே? என்னும் இவ்விஷயத்தைப் பற்றி தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்டதாக நீங்கள் உரிமை பாராட்டுகிற வெளிப்படுத்தலைக் குறித்து, உங்கள் பிரயாசத்தினாலும் ஆராய்ச்சியினாலும் கிடைத்த பலன்களையும் உங்களில் பேர்பெற்ற நியாய சாஸ்திரிகளும், வேத சாஸ்திரிகளும் அடைந்திருக்கும் தீர்க்கமான முடிவையும் தயவு செய்து எங்களுக்குச் சொல்லுங்கள். நீங்கள் சொல்லுவதை நாங்கள் கருத்தோடும், பொறுமையோடும், நடுநிலைமையோடும் கேட்போம்.

நமது கத்தோலிக்கச் சிநேகிதர்கள் கொடுக்கும் மறுமொழி என்னவென்றால்: "உங்கள் கேள்விக்குச் சார்பான எங்கள் போதனைகள் மகா தீர்க்கமும் திட்டமுமானவை. தேவ வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் இவ்விஷயத்தைத் தீர ஆலோசித்து ஆராய்ந்தறிந்திருக்கிறோம். எங்கள் தீர்மானமும் போதனையும் என்னவென்றால்;- மனிதன் மரிக்கும் போது மூன்று இடங்களில் ஓரிடத்திற்குப் போகிறான். முதலாவது, பரிசுத்தவான்களைப் பற்றிக் கவனிப்போம். இவர்கள் கொஞ்சபேர்தான். மரணம் வந்த நிமிஷத்திலே இவர்கள் பரலோ கத்துக்குத் தேவனுடைய சந்நிதானத்திற்குப் போய்விடுகிறார்கள். இவர்களைக் குறித்து, "**தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்**" என்று நமது கர்த்தர் சொல்லுகிறார். (லூக். 14 : 27). சிலுவையை உண்மையாய் சுமக்கிறவர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட வர்களாகிய "சிறுமந்தையே"ஆவர். இவர்களைக் குறித்து, "**ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமு மாயிருக்கிறது: அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்**" என்று இயேசு சொல்லுகிறார். (மத். 7 : 14).

"எங்கள் குருக்களும், பிஷப்புகளும், கார்டினல்களும், போப்பாண்டவர்களுங்கூட இந்த பரிசுத்தவான்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களல்ல; ஏனெனில் இவர்களில் யாராவது மரித்துப்போனால் அவர்களின் ஆத்துமாக்களின் இளைப் பாறுதலுக்காகப் பூசை நடப்பிப்பது சபையின் வழக்கம். பரலோகத்திலிருப்பதாக நாங்கள் நம்புகிற எவருக்காகிலும் பூசைகள் (masses) நடப்பிக்கப்படுகிறதில்லை; ஏனென்றால் அங்கே போகும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் இளைப்பாறுதல் கிடைப்பது நிச்சயம். நித்திய நரகத்துக்குப் போயிருக்கிறவர்களாக நம்பப்படுகிறவர்களுக்காகவும் நாங்கள் பூசைகள் நடப்பிக்கிற தில்லை; ஏனென்றால் பூசையினால் அவர்களுக்கு எவ்வித பிரயோஜனமும் உண்டாகமாட்டாது. என்றாலும் பெருந் தொகையானோர் நித்திய நரகத்துக்குப் போவார்கள் என்று நாங்கள் போதிக்கிறதில்லை. சீர்திருத்தப்படக்கூடாத சமய பேதமுள்ள மாறுபட்ட கருத்துள்ளவர்கள் மாத்திரம், அதாவது கத்தோலிக்க உபதேசங்களை நன்றாய் அறிந்திருந்தும், அவைகளை மனப்பூர்வமாயும் துணிகரமாயும் எதிர்த்து நிற்கிறவர்கள் மாத்திரமே, இந்தப் பயங்கரமான நம்பிக்கையற்ற கதியை அடைவார்களென்பது எங்கள் போதனை.

# உத்தரிப்பு ஸ்தலத்துக்குப் போவோர் கோடிக்கணக்கானவர்கள்

"கத்தோலிக்கர்களின் போதனையின்படி, மரண மடைந்தவுடனே பொதுவாக மரித்தோர் பாவ விமோசன ஸ்தலமாகிய உத்தரிப்பு ஸ்தலத்துக்குப்போகிறார்கள். அந்த இடத்தின் பெயரின் படியே அது பாவத்தை நீக்குவதற்கான இடமாகவும் பிராயச்சித்தமாக தண்டனை, வேதனை, துக்கம், வியாகுலம் முதலியவைகளை அனுபவிக்கும் இடமாகவு மிருந்தாலும் அது நம்பிக்கையற்ற இடமில்லை. இங்கே அடைபட்டிருக்க வேண்டிய காலம், அங்கே போய்ச்சேரும் ஒவ்வொரு மனுஷனுடைய யோக்கியதைக்கும் தகுதிக்கும் ஏற்ற விதமாயும் அவனவனுக்கு அருளப்படும் சகாயத்துக்குத் தக்கபடியும் அநேக நூற்றாண்டுகளாகவோ ஆயிரக் கணக்கான வருஷங்களாகவோ இருக்கும். இவ்விஷயத்தைப் பற்றி கத்தோலிக்கர் சொல்லும் உபதேசத்தை இன்னும் அதிநுட்பமாக அறிய விரும்பினால், எங்கள் கத்தோலிக்கருக்குள் மகா விசேஷமானவர்களுக்குள் ஒருவரும், யதார்த்தமான கத்தோலிக் கரும், சில காலம் மடாதிபதியாயிருந்தவரும், சபையின் பூரண உரிமைகளையுடையவராய் ஓர் சந்நியாசி மடத்திலேயே மரித்தவருமான கீர்த்திபெற்ற கவிஞரான தாந்தே (Dante) என்பவர் எழுதிய புஸ்தகங்களைப் படித்தறிந்து கொள்ள உங்களை வேண்டுகிறோம். நாங்கள் அறிந்திருக்கிறபடி தாந்தே என்பவர் இயற்றிய இன்ஃபெர்னோ (Inferno) என்னும் காவியமானது இந்த உத்தரிப்பு ஸ்தலத்தில் நடைபெறும் சித்திரவதைகளை மகா சிறப்பாய் விஸ்தரித்துக் காட்டுகிறது. இப்பெருங்காவியம் அநேக புத்தக சாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

"டோர் (Dore) என்ற பேர்பெற்ற கத்தோலிக்கச் சித்திராசிரியரும், தாந்தே என்பவர் இயற்றிய காவியத்தை மகா உற்சாகத்தோடும் யதார்த்தத்தோடும் சித்திரம் வரைந்து விளக்கிக் காட்டியிருக்கிறார். ஜனங்களுக்குத் விளக்கிக் காட்டும்படி வரையப்பட்ட இச்சித்திரங்கள், இப்போதுதான் நடக்கிறதுபோல் உத்தரிப்பு ஸ்தலத்தில் நடைபெறும் சித்திரவதைகளையும் இம்சைகளையும் விவரித்துக் காட்டுகின்றன. செங்குத்தான மலைகளின் உச்சியிலிருந்து கொதிக்கிற தண்ணீருக்குள் குதிக்கிறவரைக்கும் பிசாசுகள் சிலரை எப்படிப் பின்தொடர்ந்து ஓட்டுகின்றன என்று அப்படங்கள் காட்டுகின்றன. நெருப்பு மயமான அம்புகளை வேறு சிலர்மேல் அவைகள் எறிந்து பாய்ச்சுகின்றன. வேறு சிலரைத் தலை கீழாகத் தொங்க வைத்துக் கொளுத்துகிறார்கள்; சிலர் கால்களைக் குழிகளில் புகுத்தி எரிக்கிறார்கள். சிலர் சர்ப்பங்களால் கடிக்கப்படுகிறார்கள்; இன்னும் சிலர் தண்ணீர் உறைகிறதுபோல் உறைந்து போகி றார்கள். இவ்விதமாக உத்தரிப்பு ஸ்தலத்துக்குப் போகிறவர்கள் அங்கே பலவித இம்சைகளை அடைகிறார்கள். 'தாந்தே' என்பவர் எழுதிய இன்ஃபெர்னோ என்ற காவியத்தை நீங்கள் வாசித்துப் பார்க்கும்படி உங்களுக்கு யோசனை சொல்லுகிறோம்; ஏனெனில் "மரித்தோர் எங்கே?" என்னும் உங்கள் கேள்விக்குக் கத்தோலிக்கரின் அபிப்பிராயப்படியுள்ள சரியான மறுமொழியை அதிலிருந்து நன்றாய் அறிந்துகொள்ளலாம். கணக்கற்ற பெரும்பான்மையோர் உத்தரிப்பு ஸ்தலத்திலிருக்கிறார்கள். புறமதஸ்தரில் கோடிக்கணக்கானவர்கள் அங்கே இருக்கிறார்கள்; ஏனெனில் அறியாமையினால் இரட்சிப்பு கிடையாது. அது எவரையும் பரலோக நிலைமையை அடையத் தகுதியுள்ளவர்கள் ஆக்குகிறதில்லை; பரலோகம் போகிறவர்களெல்லாரும் முன்பே தங்களை அதற்குத் தகுதியாக்கிக் கொண்டு புறமதஸ்தர் செய்துகொள்ள முடியாத ஓர் வகையாய் தங்களை ஆயத்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். புராட்டெஸ்டண்ட் சபை மார்க்கத் தாரில் கோடிக்கணக்கானவர்கள் அங்கே இருக்கிறார்கள். கத்தோலிக்கச் சபையின் மூலமாக அல்லாமல் வேறு எவ்விதத்திலும் அவர்கள் பரலோகம் சேர முடியாது; மேலும் தேவன் அவர்களை நித்திய நரகத்துக்குப் பாத்திரவான்களாக எண்ணமாட்டார்; ஏனென்றால் கத்தோலிக்க மார்க்கத்தை அவர்கள் அனுசரியாமல் போனதற்குக் காரணம், அவர்கள் எந்த மார்க்கத்தில் பிறந்தார்களோ அந்த மார்க்கத்தை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருந்ததும், அவர்களைச் சூழ்ந்துள்ள மற்றப் பிறவிஷயங்களிலும் அவர்கள் பற்றிக் கொள்ள வேண்டியதாயிருந்ததுமே ஆகும்.

"கொஞ்சங்குறைய எல்லாக் கத்தோலிக்கரும்" உத்தரிப்பு ஸ்தலத்துக்குப் போகிறார்கள்; ஏனெனில் கத்தோலிக்கச் சபையின் பெரிய சிலாக்கியங்களைப் பெற்று, பரிசுத்த தீர்த்தம், பரிசுத்த மெழுவர்த்தி கொளுத்துதல், பாவசங்கீர்த்தனம், பூஜைப்பலி, பிரதிஷ்டை செய்யப்பட்ட கல்லறைத்தோட்டம் முதலியவைகளைக் குறைவுபடாமல் அனுசரித்துவந்த போதிலும், பரிசுத்தவான்களுக்குரிய குணங்களை அடைந்து கொள்ளாததினால், உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள பல இம்சைகளும் வேதனைகளும் அவர்கள் பரலோகம் போகத்தக்கதாக அவர்களுடைய உள்ளங்களைப் பக்குவப்படுத்தும் வரைக்கும் அவர்கள் பரலோகம் போய்ச் சேர முடியாது. ஆனாலும் கத்தோலிக்கரல்லாதவர்கள் இருப்பது போல இவர்கள் உத்தரிப்பு ஸ்தலத்தில் வெகு காலமிருக்க வேண்டியதிராது என்று நாங்கள் உறுதியாய் நம்புகிறோம்" என்பதே மரித்தோர் எங்கே? என்ற நம்முடைய கேள்விக்குரிய கத்தோலிக்கரின் பதிலாகும்.

# துக்கத்தையளிக்கும் வருங்கால நிகழ்ச்சி

மேற்கூறிய விஷயங்களை அன்போடு வெளியிட்ட தற்காக நமது கத்தோலிக்கச் சிநேகிதர்களுக்கு நன்றி கூறுகி றோம். அவர்களுடைய உத்தரிப்பு ஸ்தலம் எங்கே இருக்கிறது என்றோ அவ்விடத்தைக் குறித்துள்ள விஷயங்கள் அவர்களுக்கு எப்படித் தெரிய வந்தன என்றோ நாம் அவர்களைக் கேட்கப் போகிறதில்லை; ஏனெனில் அவ்விதக் கேள்விகளைக் கேட்பதும், அவர்களைக் கோபமூட்டுவதாயிருக்கும்; அவர்களைக் கோபப் படுத்துவதற்கு நமக்கு விருப்பம் கிடையாது. "மரித்தோர் எங்கே?" என்னும் நமது கேள்வியைக் குறித்து அவர்களின் முதிர்ச்சி யடைந்த தீர்க்கமான கருத்து இன்னதென்று அறியவே நாம் விரும்புகிறோம். நாம் எதிர்பார்க்கக் கூடியபடி அவர்களுடைய மறுமொழி தெளிவும் நியாயமும் தேவ வசனத்துக்குரியதுமாக இருக்கிறதில்லை என்று நாம் மிகுந்த துக்கத்தோடே தெரிவிக்கிறோம். பரிதாப நிலைமையிலிருக்கிற நமது மனுக் குலமானது, அப்போஸ்தலன் சொல்லுகிறபடி, ஆதிப்பாவத்தின் மூலமாய் இப்பொழுது பெருமூச்சுவிட்டுப் புலம்புகிற சிருஷ்டியாயிருக்கிறதென்றும், சில வருஷங்களுக்கு மட்டுமுரிய தற்கால ஜீவியமானது சஞ்சலம் நிறைந்ததாய் இருக்கிற

தென்றும் நாம் அறிகிறதினால், நமது உள்ளங்கள் துக்கத்தினால் பொங்கிப் போயிருக்கின்றன. இக்காலத்துப் பாடுகளும் உபத்திரவங்களும் கடந்தவுடனே உத்தரிப்பு ஸ்தலத்தில் பல நூற்றாண்டுகளாக அனுபவிக்கும் வியாகுலங்களும் வேதனைகளும் நம்மைச் சுத்திகரித்துப் பரலோக மகிமையையும் தேவ சந்நிதானத்தையும் அடைய நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கும் என்றாலும், 'தாந்தே' என்பவர் விவரித்துக் காட்டுகிறபடியுள்ள அப்பயங்கரமான வேதனைகளையும் இம்சைகளையும் பல நூற்றாண்டுகளாக அனுபவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நினைக்கும்பொழுது, நம்மெல்லாருக்கும் அந்த உபதேசம் துக்கத்தையும் சஞ்சலத்தையும் கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல் அது நம்மைப் பயமுறுத்தி அதைரியப் படுத்துகிறதாயும் இருக்கிறது. மேலும் "மரித்தோர் எங்கே?" என்னும் நமது கேள்விக்குக் கத்தோலிக்க மதம் கொடுக்கும் மறுமொழி பிற சமயங்கள் கொடுக்கும் மறுமொழியைவிட அதிக மேலானதல்ல என்பது, வேத சாஸ்திரிகள் சிலருக்கு அசாதாரணமாய்த் தோன்றினாலும், அது உண்மையானதே. ஆகவே நமது மனதுக்கும் உள்ளத்துக்கும் ஏற்ற திருப்திகரமான மறுமொழி இன்னும் கிடைக்காததால், இன்னும் திருப்திகரமான பதில் கிடைக்கக்கூடிய வேறு இடத்தைத் தேடுவது நியாயமேயாகும்.

## புரோட்டெஸ்டண்ட் சபையாரின் மறுமொழி

எவரையும் அவமதிப்பதும் எவருக்காவது அவமரியாதை உண்டுபண்ணுவதும் நமது நோக்கம் அல்ல என்பதைக் காட்டும்படியாக நாம் நம்மையே ஓர் புரோட்டஸ்டண்ட் வகுப்பைச் சேர்ந்தவனாக ஒப்புக் கொள்ளுகிறோம். இதை வாசிக்கிறவர்களில் பெரும்பான்மையோர் புரொட்டஸ்டண்ட் வகுப்பாராக இருக்கலாம். நம்மில் அநேகர் கடந்த காலங்களில் புரோட்டஸ்டண்ட் வகுப்பாரின் மன விசாலத்தையும் புத்திக் கூர்மையையும் கல்வித் திறமையையும் பற்றி சற்று பெருமை பாராட்டிக் கொள்வதுண்டு. ஆகவே நமது கேள்விக்குத் தெளிவும் நியாயமும் திருப்திகரமுமான மறுமொழியை அவர்களிடம் எதிர்பார்ப்பது நியாயமாகுமல்லவா? மற்றெல்லா மறுமொழிகளையும் திருப்திகரமற்றவை என்று தீர்த்துவிட்டபடியால், இவ்வுலகில் நம் மனுக்குலத்தில் எவ்வகையிலும் மிக மேன்மையான சிலாக்கிய பாக்கியங்களை அடைந்திருக்கும் இவர்கள் இவ்விஷயத்தைப் பற்றிச் சொல்வதைக் கவனிப்போம். உலக ஜனத்தொகையில் இவர்கள் ஏறக்குறைய பன்னிரண்டில் ஓர் பங்காக இருக்கின்றனர். பல வகுப்புகளாகப் பிரிக்கப் பட்டவர்கள்; இவ்வுலகில் நம் மனுக்குலத்தினருக்குள் எவ்வகையிலும் மிக மேன்மையாக சிலாக்கியங்களை அடைந்திருப் பவர்களாக மதிக்கப்பட்டவர்கள். இவர்களுடைய ஞானத்தினாலும் புத்திக் கூர்மையினாலும் ஆராய்ச்சியினாலும் நமது கேள்விக்குக் கிடைக்கக்கூடிய மறுமொழி மகா விசேஷமும் திருப்தியுமுள்ளதாயிருக்கக் கூடியதென்று நாம் எதிர்பார்க்க வேண்டியது நியாயமேயாகும். ஆனால் அன்பான சிநேகிதரே! நாம் கண்டுபிடிக்கிறதென்ன? வெளியே சொல்லப் பெரிய வெட்கம், நேர் எதிரிடையானதையே நாம் காண்கிறோம்.

நமது கேள்விக்குப் பதில் கொடுக்கக்கூடிய நியாயக் கேடான மறுமொழிகளில், புரோட்டஸ்டண்ட் பிரிவினருடைய அபிப்பிராயமே நகைப்புக்கிடமானதும், நியாய விரோதமானதுமான மறுமொழியாயிருக்கிறதென்று நாம் காண்கிறோம். அவர்களுடைய மறுமொழியானது, கத்தோலிக்கரும், புறமதஸ்தரும், சந்தேகவாதிகளும் அவர்களை வெட்கத்திற்குட் படுத்துவதற்கு ஏதுவாயிருக்கிறது. இது நம்மைப் பிரமிப்படையச் செய்கிறதில்லையா? இது நம்மைத் திடுக்கிடப் பண்ணக்கூடுமா? "***சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்***" என்று எழுதப்பட்டிருக்கிறது. (நீதி. 27 : 6). ஆகையால் புரோட்டஸ்டண்டுகள் என்னும் முறையில் நமக்குள்ள கௌரவத்துக்கு ஏற்பட்டிருக்கும் குற்றங் குறைகளை நாம் வெளிப்படுத்துவதை எங்களோடுகூட சகித்துக் கொள்ளுங்கள். நம்மைக் கோபத்துக்கும் வெட்கத்துக்கும் உட்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடே அல்ல, நாம் இவ்விஷயத்தை நல்மனதோடும், தெளிந்த புத்தியோடும் ஆராய்ச்சி செய்வோமானால், அது நமக்குப் பிரயோஜனத்தை உண்டுபண்ணி, நம்மைச் சத்தியத்தை அறிந்துகொள்ள வல்லவர்களாக்கி, சகல ஜனங்களுக்கும் முன்பாக நமது தேவனுடைய உண்மையான ஏற்பாடுகளை மேலான நிலைமைக்குக் கொண்டுவந்து, நாமும் மற்றெல்லோரும் நமது பரலோக பிதாவினுடைய குணாதிசயங்களையும் நோக்கங்களையும் நமது மனுக்குலத்தினருக்குள் அவர் நடப்பிக்கும் பிற்கால நடபடிகளையும் பற்றியுள்ள தெளிவான அபிப்பிராயங்களையும் நாம் அடைந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடேயே இக்குறைகளை எடுத்துக் காண்பிக்கிறோம்.

ஆகையால் மனதைப் புண்படுத்தும் இவ்விஷயத்தைச் சோதித்தறிய பொறுமையோடு எங்களுக்கு இடங்கொடுங்கள். புண்ணில் கட்டிய கட்டை அவிழ்த்து அதைச் சுத்தப்படுத்துவது வேதனையை உண்டாக்கலாம். ஆனால் அதைச் சோதித்து சிகிச்சை செய்வதினால் நன்மை உண்டாகும். அப்படியே நாமும் இவ்விஷயத்தை ஆராயாமல் விடுவது நல்லதல்ல. நம் முற்பிதாக்கள் புத்திக் கூர்மையும் நல்லெண்ணமும் உடைய கத்தோலிக்கராயிருந்தார்கள். அவர்கள் கத்தோலிக்கக் கொள்கைகளில் வளர்க்கப்பட்டிருந்தார்கள். அக்கொள்கைகள் தேவ வசனத்துக்குப் பொருந்தாதவைகள் என்றும் நியாயத்திற்கு நிலைநிற்காதவைகள் என்றும், அவர்கள் கண்டுபிடித்து அவைகளை எதிர்த்துத் திடமாகப் பேசினபடியால் அவர்களுக்கு புரோட்டஸ்டண்டுகள் (Protestents) (எதிர் வாதிகள்) என்ற பெயர் கிடைத்தது, ஆனால் அவர்கள் ஒருவருக்கொருவர் செய்த எல்லாவற்றையும் சரியென நாம் ஒப்புக்கொள்ளுகிறதில்லை.

## புரோட்டெஸ்டண்ட் சபைப்பிரிவும் உத்தரிப்பு ஸ்தலமும்

'பர்கேட்டரி' என்ற உத்தரிப்பு ஸ்தலத்தைப் பற்றி வேறெந்த நூலாவது வேத புத்தகமாவது யாதொன்றும் சொல்லவில்லை என்பதே நம் முற்பிதாக்கள் திடமாக எதிர்த்துப் பேசின விஷயங்களில் ஒன்றாகும். அவர்கள் கபடமற்ற நேரான மனமுடையவர்கள் என்பது உண்மையில் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது; ஏனெனில் உத்தரிப்பு ஸ்தலத்தைப் பற்றிய அபிப்பிராயங்களை அப்படியே பொறுக்கி எடுத்து ஒருக்காலும் உதவாதபடி அவைகளை முற்றிலும் நீக்கிவிட்டார்கள். உத்தரிப்பு ஸ்தலத்தை நீக்கிய பிற்பாடு, பரலோகமும் நரகமும் அவர்களுக்கு மீதமாக இருந்தது. இவ்விரண்டு இடங்களில் ஒன்றுக்கு ஒவ்வொரு மனிதனும் தன் மரண நேரத்தில் போய், நித்திய

காலமாய் அங்கேயே இருக்க வேண்டும் என்பது அவர்களது அபிப்பிராயமாகிவிட்டது. நல்லெண்ணமுள்ள நமது முற்பிதாக் களாகிய இவர்கள் நாம் எதிர்பார்க்கிற அளவில் புத்திக் கூர்மையுடையவர்களாகவும், நியாயதோரணையுடைய வர்களாகவும், இருக்கவில்லை என்பது தெளிவு; ஏனெனில் சத்தியத்தை அறிகிற அறிவில் அவர்களுக்குண்டான சிக்கலான நிலைமையை அறிந்து கொள்ளாதே போனார்கள், என்றாலும் அவர்கள் அதை ஓரளவாய் அறிந்த போதிலும் மரணத்தையும் நரகத்தையும் பற்றி நாம் இப்பொழுது அறிகிறதுபோல அறியவில்லை என்று நாம் சொல்லலாம். அக்காலத்தில் கால்வின், நாக்ஸ் என்போரின் கோட்பாடு புரொட்டெஸ்டண்டு வகுப்பாருக்குள் பரவி வந்தது. தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டு ''சிறுமந்தை'' எனப்படுகிற பரிசுத்தவான்களே பரலோ கத்துக்குப் போவார்களென்றும், மீதியானவர்கள் எல்லாரும் சதாகாலமாய் வேதனைகளை அனுபவிக்கிற நரகத்துக்குப் போவார்கள் என்றும் ஒவ்வொரு கிறிஸ்தவ வகுப்பும் நம்பும்படி அக்கோட்பாடு செய்துவிட்டது.

## முன்னிலும் அதிகமான அறிவொளி இப்பொழுது உள்ளது

தேவனே! நான், என் மனைவி, என் மகன் யோவான், அவன் மனைவி ஆகிய எங்கள் நால்வரையும் மாத்திரமே ஆசீர்வதியும் என்று கத்தோலிக்கராவது புரோட்டஸ்டண்டு பிரிவினராவது தற்காலத்தில் ஜெபிக்கிறதில்லை.

இருண்ட யுகங்கள் என்று சொல்லப்படுகிற காலத்தில் நடந்த காரியங்களைக் கவனித்தால், நமது முற்பிதாக்களைவிட அதிகமான பகுத்தறிவுடன் விஷயங்களை யூகிக்கத்தக்க அறிவின் கண்களை அடைந்திருப்பதற்காகக் கத்தோலிக்கரும் புரோட்டெஸ்டண்ட் பிரிவினரும் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துவது நியாயமாகும். ''புறமதஸ்தர்கள் நித்திய நரகாக் கினைக்கு முன் குறிக்கப்பட்டவர்களானபடியால், அவர்கள் பிற்கால நல்வாழ்வுக்கு நம்பிக்கையற்றவர்கள்'' என்ற தங்கள் கொள்கையை, ஊழ்வினை அல்லது முன் குறிக்கப்படுதல் என்ற கோட்பாட்டில் பயிற்றுவிக்கப்பட்ட நம் முற்பிதாக்கள் அறிந்துணரத் தவறிப்போனார்கள்; ஏனெனில் வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கையை (அதாவது புறமதஸ்தர் நித்திய நரக வேதனைக்கு முன் குறிக்கப்பட்டவர்களென்பதை) ஒப்புக்கொண் டவர்களே மிஷனெரிகளை அனுப்பி புறமதஸ்தருக்குள்ளே வெகு வைராக்கியமாய் இப்பொழுது சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருகிறார்கள். இதைக் குறித்து நாம் சந்தோஷமடைகிறோம். நமது புத்தியானது நமது உள்ளத்தோடு கூடி சரியான நிலைமைக்கு வந்து சேராதே போனாலும், நமது உள்ளம் உண்மையும் மேன்மையுமான நிலைமையிலிருக்கிறது என்ப தற்கு இது ஒரு அடையாளம். நாம் இன்னும் நேர்மையற்றதும் கோணலானதுமான கொள்கைகளையே நன்கு மதித்து, அவைகளே முற்றிலும் நேரானதும் ஒழுங்கானதுமானவை என்று பாவனை செய்ய முயலுகிறோம்.

பரலோகம் சம்பூரணமான இடமென்றும், அங்கே பிரவேசிக்கிற எவருக்கும் ஒரு மாறுதலும் இராதென்றும், ஆகவே அந்த பரம வாசஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும் முன் இவ்வுல கிலேயே அவர்கள் பரீட்சிக்கப்பட்டு, திருத்தப்பட்டுப் பூரண சற்குணமடைந்து தீரவேண்டுமென்றும் வேத புத்தகமும் கத்தோலிக்கரும் சொல்லுகிறபடியே புரொட்டெஸ்டண்ட் வகுப்பாரின் உபதேசங்களும் கூறுகின்றன. சுருங்கச் சொல்லின், இப்பொழுது கிறிஸ்து இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கிற ''**இருதயத்தில் சுத்தமுள்ளவர்களும்**'' ஜெயம் பெறுகிறவர் களுமாகிய தெரிந்தெடுக்கப்பட்டவர்களே பரலோகம் போய்ச் சேருவார்கள் என்ற போதகத்தை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் மனுக்குலத்திலுள்ள மீதியானவர்களின் கதி என்ன? ஆ! இதில்தான் நியாயவிரோதமும் ஆட்சேபமும் கஷ்டமும் ஏற்பட்டிருக்கின்றன; இதைப் பற்றிய ஆராய்ச்சியும் உபதேசமுமே மகா மோசமானது. தெரிந்தெடுக்கப்படுகிறவர்கள் நீங்கலாக மற்றெல்லா ஜனத்திரளும் நித்திய காலமாய் வேதனையும் சித்திரவதையும் அடைய வேண்டும் என்பது, மனிதரால் உண்டான கோட்பாடுகளில் *(creeds)* வழங்கி வரும் நியாய தோரணையாயிருக்கிறது. மிக விஸ்தாரமாய் சிந்திக்கக்கூடிய நமது மனமும் உள்ளமும் இந்த உபதேசத்தை ஒப்புக் கொள்ளுகிறதுமில்லை, அதற்குச் சற்றேனும் இணங்கு கிறதுமில்லை. இன்றைக்கும் மனுக்குலத்தில் முக்கால்வாசி பேர் புறமதஸ்தராக இருக்கிறபடியினாலும் பெருந்தொகையான மனுக்குலமானது தேவனையும் இரட்சிப்புக்குரிய அவரது ஒழுங்குகளையும் பற்றி ஒருக்காலும் கேள்விப்படாமலிருக்கிற படியினாலும் மேற்கூறிய மானிட கோட்பாட்டுக்கு நாம் எதிர்த்து நிற்கிறோம்.

## பேரறிஞர்கள் கலக்கம் அடைந்திருக்கிறார்கள்

மனுஷரால் உண்டான கோட்பாடுகள் நம்மைத் திகைப்பும் தடுமாற்றமும் குழப்பமும் அடையச் செய்கின்றன; ஏனெனில் பரிதாபமான நிலைமையிலிருக்கிற மனுக்குலமானது நித்திய காலமாய் சங்கடத்தையும் வேதனையையும் அடையும் என்று நினைப்பதற்கோ, பரலோகம் போய்ச் சேருவதற்குத் தகுதியானவர்களென்று சொல்வதற்கோ நமது மனம் இடங்கொடுக்கிறதில்லை. பரலோகவாசிகளில் முக்கால்வாசிப் பேர் சற்றேனும் சீர்திருத்தப்படாதவர்களாய் இருப்பார்கள் என்பதை உண்மையென நம்புவது, மெய்யாகவே வேத போத னைக்கு மாத்திரமல்ல, நியாயத்துக்கும் விரோதமாய் இருக்கும். கத்தோலிக்கரின் உபதேசமான, ஆனால் வேத புத்தகத்தில் சொல்லப்பட்டிராத உத்தரிப்பு ஸ்தலத்தை நம் முற்பிதாக்கள் நீக்கி, கத்தோலிக்கரின் கோட்பாடுகளிலுள்ள மீதியான கொள்கைகளை (நரகம் மற்றும் பரலோகத்தைப் பற்றிய கோட்பாடுகளை) வைத்துக் கொண்டதினால் நமக்குரிய வேத சத்தியங்களைக் கெடுத்துப் போட்டார்கள். அதுமட்டுமல்லாமல், தங்களுக்குள் ளிருந்த உபதேசங்களை முற்றிலும் சீர்ப்படுத்தி முன்னிலும் மேலானவைகளை உண்டாக்கிக் கொள்ளவில்லை. உத்தரிப்பு ஸ்தலமும் அதைப் பற்றியுள்ள உபதேசமும் வேத புத்தகத்திற்கு இசைவானவை அல்ல, வேத வசனங்களில் உள்ளவைகளுமல்ல என்று நாம் ஆட்சேபிக்க வேண்டியதேயானால், அப்படியே பூமியிலுள்ள சகல வம்சங்களும் நித்திய வேதனையை அடைவார்கள் என்று போதிக்கிற உபதேசமும் வேத போதனையல்ல என்று நாம் ஆட்சேபிக்க வேண்டாமா? விசேஷமாக, கிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு ஒப்புரவாகி நித்திய ஜீவனை அடைந்து கொள்வதற்கேதுவான ஓர் வாய்ப்பையும் சத்தியத்தை அறியும் அறிவையும் அடைந்து

கிறிஸ்துவின் மூலமாய் ''**பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும்**'' என்று வேத புத்தகம் வெளிப்படையாகக் கூறி அறிவிக்கிறபடியால் நாமெல்லாரும் நித்திய நரகவேதனையின் உபதேசத்தைத் திடமாய் ஆட்சேபிக்க வேண்டும். நித்திய வேதனையின் உபதேசம் மகா நியாயக்கேடானதென்று வற்புறுத்திக் கூறுவதும் எழுதுவதும் அவசியமானதென்று நிச்சயிக்கிறோம். ஆனாலும் இதைப் பற்றி புரொட்டெஸ்டண்ட் வகுப்பாரின் முக்கியமான கொள்கைகள் என்னவென்று கவனிப்போம்:-

(1) கல்வினியரின் கருத்து :- ''மனுஷன் பாவத்தில் விழுவதை முன்பே அறிந்து, தேவஞானமும் வல்லமையும் மனுக்குலத்திற்காக முன்பே ஆலோசனை பண்ணி, நரகம் என்ற ஓர் விஸ்தாரமான இடத்தைச் சிருஷ்டித்து, தெரிந்து கொள்ளப் படுகிறவர்களென்னும் சிறுமந்தையாகிய பரிசுத்தவான்கள் நீங்கலாக மற்றெல்லாரையும் சித்திரவதை செய்வதற்கு நெருப்பினால் அழிவடையாத பிசாசுகளை நியமித்து அவர்களை அந்த இடத்திலே வைத்திருக்கிறது'' என்பதே. இதில் தேவ ஞானமும் வல்லமையும் மிதமிஞ்சிப் பேசப்பட்டு தேவநீதியும் அன்பும் கவனிக்கப்படவே இல்லை.

(2) புரொட்டெஸ்டண்ட் பிரிவினரில் பெரும்பான்மை யோரால் அனுசரிக்கப்படும் மற்றொரு முக்கியமான ''அர்மினியக் கொள்கை என்னவென்றால் :''தேவ அன்பும் நீதியும் சேர்ந்து உலகத்தைச் சிருஷ்டித்து நித்திய வேதனையையும் ஏற்படுத்தி விட்டன. இதில் தேவ ஞானமும் வல்லமையும் கலந்து கொள்ளவில்லை. ஆகவே தமது சிருஷ்டிகளை நீதியோடும் அன்போடும் நடத்த எத்தனிக்கையில், தேவையான உதவியளிப் பதற்கு வல்லமை குறைவுபடுகிறபடியால் தேவனே மோசமான நிலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்'' என்பதே ஆகும். அருமையான சிநேகிதரே! நாம் இவ்விஷயத்தை ஆராய்வதில், தேவ வசனத்தைத் தேடாமல், மனுஷ அபிப்பிராயங்களை நாடித் தேடினதினாலேயே முழுச் சங்கடத்திற்கு ஆளானோம்.

## சத்தியத்தை விட்டு விலகி கட்டுக்கதைக்குச் செவி சாய்த்தல்

நமது பரலோக பிதாவினுடைய நீதியும் அன்பும் ஞானமும் நிறைந்த பரிசுத்த ஏற்பாட்டை உங்களுடைய கவனத்துக்குக் கொண்டு வருகிறபொழுது நாங்கள் உங்களைப் பிரமிப்படையச் செய்வோம் என்பது நிச்சயம். இக்காலம்வரை அந்த ஏற்பாடு புறக்கணிக்கப்பட்டு, இருண்ட யுகங்களாகிய அந்தகாரத்தின் நாட்களிலுண்டான மானிட பாரம்பரியமாகிய குப்பை கூளத்தினுள்ளே புதையுண்டு போயிற்று. ஆகவே, இப்போது சத்தியத்திற்குச் செவி கொடுப்பதைப் பார்க்கிலும் கட்டுக்கதைக்குச் செவி கொடுப்பது சகஜமாகி விட்டது. சிநேகிதரே! ''**பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும் உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்தி ருக்கிறது**'' என்று தேவன் தீர்க்கதரிசியின் மூலமாகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். (ஏசா. 55 : 9)

''தேவன் நம்மை விட மிக மேலானவர்'' என்ற கருத்தை நமது உள்ளத்தில் கொள்வதைப் பார்க்கிலும் வேறெதை நாம் நம்ப வேண்டும்? ''**உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்: உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்: உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்: உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிற வர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்**'' என்று நமது கர்த்தர் சொன்னார் (மத். 5 : 44). ''**உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு: அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங்கொடு.**'' (ரோம. 12 : 20). இதை நாம் கவனிக்கும்பொழுது தேவன் தமது சத்துருக்களை வதைப்பாரென்றும், அதுவும் நித்திய காலமாய் வதைப்பாரென்றும் நாம் நினைப்பது எவ்வளவு விபரீதமானது. அது மாத்திரமல்ல, தற்காலத்தில் பிரதிகூலமான சூழ்நிலைகளின்கீழ் சத்தியத்தை அறிய முடியாததால் விசுவாசி களாய் மாறாத எல்லாரையும், அதாவது அறியாமைக் குள்ளானவர்களையும், புறமதஸ்தரையும், விசேஷமாய் அவரு டைய சத்துருக்களாய் இராதவர்களையுங்கூட அவர் வதைப்பா ரென்றும் நாம் நினைப்பது எவ்வளவு விபரீதமானது! அதாவது நாம் அப்படி நினைப்பது, பைத்தியக்காரத்தனமானது, மதிகேடானது, தவறானது, சட்டத்துக்கு விரோதமானது. அன்புள்ள சிநேகிதரே! ஒரே ஒரு வழியாய் மாத்திரமே நாம் குழப்பத்தை விட்டு வெளியேறி நமது சிருஷ்டிகரையும் அவர் நமது மனுக்குலத்துக்குள்ளே நடப்பிக்கும் கிரியைகளையும் நன்கு மதித்துக் கண்ணியப்படுத்தும் ஒழுங்கான நடையைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும்; அந்த ஒரே வழி அல்லது திட்டம், வேத புத்தகத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற படியேயுள்ள சத்தியத்தைப் பின்பற்றுவதே ஆகும்.

## வேத புத்தகம் என்ன சொல்லுகிறது?

மேற்காட்டிய மானிடக் கொள்கைகள் எல்லாம், மரணமென்பது மரணத்தைக் குறிக்காதென்றும், மரிப்பது, மரணத்துக்கு முன்னிருந்ததை விட அதிக உயிரை அடைவ தென்றும் சொல்லுகிற பொய்யான கொள்கையின்மேல் நிலைநிறுத்தப்பட்டவைகளாகும் என்பதை அறிந்து கொள் வோமாக. ஏதேனில் நமது ஆதிப் பெற்றோரைப் பார்த்து, ''**நீங்கள் சாகவே சாவீர்கள்**'' என்று தேவன் சொன்னார். அவர்களைப் பார்த்து, ''**நீங்கள் சாகவே சாவதில்லை**'' என்று சொன்னது சாத்தான். புறமதஸ்தரும் கிறிஸ்தவர்களென்போரும் சாத்தானுடைய பொய்யை ஒப்புக்கொண்டு தேவனுடைய சத்திய வார்த்தையை முழுவதுமாய்த் தள்ளியிருக்கிறதைக் கருத்தாய்க் கவனியுங்கள். ''**நீங்கள் சாகவே சாவதில்லை**'' என்று சாத்தான் சொன்ன வார்த்தைக்கு இணங்கி, மரித்தோர் உயிரோடிருக் கிறார்களென்றும், செத்தபின் மனுஷர் முன்னிலும் அதிகமாய் உயிரோடிருக்கிறார்கள் என்றும் புறமதஸ்தர்களும் கிறிஸ்தவர்க ளென்போரும் சாதிக்கிறார்களல்லவா? அன்புள்ள சிநேகிதரே! இதுதான் நாமெல்லாரும் செய்திருக்கிற பொதுவான தப்பிதம். கள்ளப்போதகனாகிய சாத்தானுடைய வார்த்தையை நாம் பின்பற்றியிருக்கிறோம். அவனைக் குறித்து நமது கர்த்தர், ''**அவன் சத்தியத்தில் நிலைநிற்கவில்லை: அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாய் இருக்கிறான்**'' என்று சொல்லியிருக்கிறார். (யோவா. 8 : 44).

இந்தப் பொய்யான கொள்கைகள் பல நூற் றாண்டுகளாகப் புறமதஸ்தருக்குள்ளேயே பரவியிருந்தன; ஆனால் இருண்ட யுகங்களாகிய அந்தகாரத்தின் நாட்களில் அவை கிறிஸ்துவ சபையில் நுழைந்து மேம்பாடடைந்து,

அசத்தியத்தையும் அறியாமையையும் பரவச் செய்து விட்டன. ''**நீ சாகவே சாவாய்**'' என்ற தேவ வாக்கை நமது முற்பிதாக்கள் நம்பியிருந்தார்களானால், மரித்தோருக்காக ஜெபம் பண்ணுதல், அவர்களுடைய பாவங்களுக்காகப் பூசைகள் நடப்பித்தல், அவர்களுடைய சித்திரவதையைக் குறித்து உண்டாகும் பயங்கரமான நினைவுகள் முதலிய பழக்கவழக்கங்கள் உண்டாவதற்கு ஏது இருந்திருக்காது. ''**மரித்தோர் ஒன்றும் அறியார்கள்**'' (பிர. 9 : 5). ''**அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான், அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்**'' (யோபு 14 : 21) என்ற இக்கருத்தையே துவக்கம் முதல் முடிவு வரை வேத புத்தகம் தெரிவிக்கிறது.

## மரித்தோரின் நிலைமை

மரித்தோர் எங்கே இருக்கிறார்களென்றும் அவர்களுடைய நிலைமை இன்னதென்றும் வேத புத்தகமே நமக்குத் திட்டமாய்ப் போதிக்கிறது. மரித்தோர் சந்தோஷமோ துக்கமோ, இன்பமோ-துன்பமோ எதையும் அனுபவிக்கிறதில்லை என்றும், உயிர்த்தெழுதலில் அவர்கள் விழித்தெழும்பும் வரைக்கும், சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற எதையும் அவர்கள் அறியமாட்டார்களென்றும் அது நமக்கு வற்புறுத்திக் கூறுகிறது. ஞானியின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:- ''**செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும், அறிவும் ஞானமும் இல்லையே.**'' (பிர. 9 : 10).

நல்லோர் பொல்லோராகிய யாவரும் மரணத்தில் ''**நித்திரை அடைந்தார்கள்**'' என பழைய புதிய ஏற்பாடுகளில் எழுதப்பட்டிருக்கிறதைக் கவனியுங்கள். ''**இயேசுவுக்குள் நித்திரை செய்கிறவர்களைப்**'' பற்றியும், ''**கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்களைப்**'' பற்றியும் பவுல் பேசுகிறதையும், ''**மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் அவர்களெல்லாரும் அழிந்துபோயிருப்பார்கள்**'' என்று அவர் சொல்லுகிறதையும் கவனியுங்கள். (1 கொரி. 15 : 18). அவர்கள் அழிந்து போகக் கூடியது எங்கே? பரலோகத்திலேயா? உத்தரிப்பு ஸ்தலத்திலேயா? அல்லது வேதனை நிறைந்த நரகத்திலேயா? நிச்சயமாகவே ஒருவரும் அவ்விதம் போதிக்கிறதில்லை. அவர்கள் இப்பொழுதே பிரேதக் குழியில் அழிவின் நிலைமையிலிருக்கிறார்கள். மரணத்தின் வல்லமையிலிருந்து உயிர்த்தெழுதல் மூலமாய் அவர்கள் விடுதலையடைந்தாலன்றி, அழிவு முடிவான அழிவாகவே இருக்கும். ஆதலால்தான், ''**தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அழிந்து போகாமல்** (இங்கிலிஷ் பைபிள் காண்க) **நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்**'' என்று நாம் வாசிக்கிறோம். (யோவா. 3 : 16).

சுருங்கச் சொல்லின், மனுஷன் மிருக சிருஷ்டிப்புக்கு மேலாக, தனது சிருஷ்டிகரின் சாயலிலும் அவருக்கு ஒப்பாகவும் உண்டாக்கப்பட்டானென்றும், ஏதேனில் இருக்கையில் பூரண ஜீவனை உடையவனாய் இருந்தான் என்றும், பூரண கீழ்ப்படிதலுள்ளவனாயிருந்தால், அந்த ஜீவனைத் தனக்கே உரியதாக்கிக் கொள்ளக்கூடியவனாய் இருந்தானென்றும் வேதம் போதிக்கிறது. ஆனால் அவன் பரீட்சையில் தவறிப்போய் மரணத் தீர்ப்புக்குட்பட்டான். ''**அதை நீ புசிக்கும் நாளிலே, செத்துக் கொண்டே நீ சாவாய்**'' (ஆதி. 2 : 17-இங்கிலிஷ் பைபிள் மார்ஜின் காண்க). சாவு ஆரம்பித்து 930 வருஷங்களுக்குப் பிற்பாடு அது, நமது ஆதித் தகப்பனாகிய ஆதாம் பிரேதக் குழியைச் சேரச் செய்தது; அவனுக்கு நேரிட்ட பெலவீனங்களிலும் குறைவுகளிலும் மரணத்தீர்ப்பிலும் அவனுடைய பிள்ளைகள் எல்லோரையும் உட்படுத்திவிட்டது. அவன் பாவஞ்செய்த அதே நாளில் மரித்துப் போனான், அந்நாள் 24 மணி நேரங்கொண்ட நாளாயிராமல் ஆயிர வருஷங்கொண்ட நாளாக இருக்கிறது என்று பேதுரு அப்போஸ்தலன் விளக்குகிறார்; ''**கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறது.**'' (2 பேது. 3 : 8).

## தேவ அன்பு வெளிப்படுத்தப்பட்டது

இந்த ஆறு - மாபெரும் நாட்களின் காலத்தில் மரணத் தீர்ப்பானது, மனிதன் சில விஷயங்களில் மிருகத்துக்குச் சமமான நிலைமையை அடையும்படிச் செய்து, தேவன் அவன்மேல் இரக்கங்கொண்டு அவனுக்கு ஓர் நிவாரணம் உண்டு பண்ணினாலன்றி, மற்றப்படி எவ்விதமான நம்பிக்கையுமின்றி பிற்கால ஜீவியமே மனுஷனுக்கு இராதென்று சொல்லக்கூடிய நிலைமையை அவன் அடையும்படி செய்திருக்கிறது. ஆனால் பிற்காலத்தில் அவனுக்கு ஜீவன் கிடைக்குமென்பது ''**ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும்**'' என்ற வாசகத்தில் சுருக்கமாக ஜாடையாய் - குறிப்பாய் தெரிவிக்கப்பட்டது. மேலும் அது ஆபிரகாமுக்கு மிகச் சிறப்பாய் சொல்லப்பட்டது. ''**உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.**'' (ஆதி. 12 : 3; 28 : 14).

ஆனால் மாபெரும் ஆயிர வருஷ நாட்களில் நான்கு நாட்கள் கடந்த பின்புதான், மனுக்குலத்தை மீட்கும்படியாக தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார்; ''**கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரித்து**,'' (1 பேது. 3 : 18) தகப்பனாகிய ஆதாமின்மேல் விதிக்கப்பட்ட தண்டனைக்குப் பிராயச்சித்தம் உண்டாக்கினார். கல்வாரியில் முடிக்கப்பட்ட அந்த மீட்பின் வேலையின் பலனாகவே ''**நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு-**'' அந்த மீட்பின் வேலையின் பலனாகவே மரணத் தீர்ப்பினின்றும் விடுதலையடைந்து, எல்லாரும் சிறைவீடாகிய பிரேதக் குழியிலிருந்து மீண்டும் வருவார்கள். (அப். 24 : 15).

## பாவத்தின் தண்டனை மரணமே, சித்திரவதையல்ல

நித்திய வேதனையல்ல, ''**பாவத்தின் சம்பளம் மரணமே**'' என்று வேத புத்தகம் வெளிப்படையாய்ச் சொல்ல (ரோம. 6 : 23), ஆதிப் பாவத்தின் சம்பளம் நித்திய வேதனையென்று கற்பிப்பதனால் உண்டான தப்பிதத்தை நன்றாய்க் கவனியுங்கள். மனுஷன் பாவத்தில் விழுந்த சம்பவத்தைப் பற்றிய சரித்திரத்தையும் அவன் மேல் விதிக்கப்பட்ட தீர்ப்பையும் பற்றி நாம் ஆதியாகமத்தை வாசித்து ஆராய்வோமானால், மரண தண்டனையைப் பற்றியே அல்லாமல், வருங்கால நித்திய வேதனையைப் பற்றி ஒரு எழுத்தாவது, ஒரு வார்த்தையாவது, ஒரு வாக்கியமாவது நாம் காணவே முடியாது. அந்தத் தீர்ப்பை இரண்டாம் தடவை திரும்பச் சொல்லும்பொழுதும், ''**நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்**'' என்று தேவன்

சொன்னாரேயல்லாமல் (ஆதி. 3 : 19) பிசாசுகள், அக்கினி, வேதனை முதலியவைகளைப் பற்றி தேவன் ஒரு வார்த்தையும் சொல்லவே இல்லை.

அப்படியானால், ''**பிசாசுகளின் உபதேசங்கள்**'' என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிற பிசாசின் வஞ்சகங்களால் எதிராளியாகிய சாத்தான் நமது பிதாக்களை இருண்ட யுகங்களில் எப்படி வஞ்சித்தான்? தீர்க்கதரிசன புஸ்தகங்கள் எதுவும் பாவத்திற்கு தண்டனை மரணமேயல்லாமல் வேறெதையும் கூறுகிறதில்லை என்பதைக் கவனியுங்கள். அப்படியே புதிய ஏற்பாடும் மரண தண்டனையையே பிரசித்தப்படுத்திக் கூறுகிறதென்பதைக் கவனியுங்கள். புதிய ஏற்பாட்டில் பாதிக்கு மேலானவற்றை எழுதினவரும், ''**தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்**'' என்று நமக்கு உறுதி சொல்லு கிறவருமாகிய பவுல் அப்போஸ்தலனும் (அப். 20 : 26) நித்திய வேதனையைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவே இல்லை. ஆனால் பாவத்தையும் அதற்குரிய தண்டனையையும் பற்றி அவர் பேசுகையில், ''**இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று**'' என்று அவர் சொல்லுகிறார். (ரோம. 5 : 12). ஒரு மனுஷன் மேலாவது அல்லது எல்லா மனுஷர் மேலாவது வந்தது மரணமேயன்றி நித்திய வேதனை யல்ல என்பதைக் கவனியுங்கள்.

## மரணம் போதுமான தண்டனையாகுமா?

மரணமானது பாவத்திற்குச் செலுத்தக்கூடிய போது மான தண்டனையல்ல என்னும் எண்ணத்தை எவராவது எழுப்புவாரானால், நாம் செய்ய வேண்டிய காரியம், அவருடைய கோட்பாடுகள் நியாயமற்றவையென்று உண்மையான விஷயங்களின் மூலமாய் அவருக்கு நிரூபிக்க வேண்டிய தேயாகும். கீழ்ப்படியாமையாகிய பாவத்தினிமித்தம், ஆதாம் தனது வாசஸ்தலமாகிய பரதீசை இழந்துவிட்டான்; தனக்குரிய பூரண ஜீவனையும் தேவனோடுள்ள அன்னியோன்னி யத்தையும் அவன் இழந்து, அதன் பலனாக வியாதியையும் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் துக்கத்தையும் அழுகை யையும் மரணத்தையும் அடைந்தான். அதோடு அவனுடைய சந்ததியார் எல்லாரும் (நியாயமாய் மதிப்பிடக்கூடியபடி சுமார் 3000 கோடி ஜனங்கள்) தேவ ஆசீர்வாதங்களை எல்லாம் இழந்து, சரீரப்பிரகாரமான, மனம் சம்பந்தமான மற்றும் சன்மார்க்க விஷயங்களில் குறைபாடுகளைச் சுதந்தரித்துக் கொண்டவர்களாய் அப்போஸ்தலன் சொல்லுகிறபடி ''**சர்வ சிருஷ்டியும்** (மனுக்குலம் முழுவதும்) **ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது.**'' (ரோம. 8 : 22).

நாம் அறிய வேண்டிய விஷயத்தின் நிலையைக் கவனித்துப் பாருங்கள்! ''**துர்க்குணத்தில் உருவாகி**'' பாவி களாய்ப் பிறந்த 3000 கோடி ஜனங்கள்! (சங். 51 : 5) சில மணிநேரங்களோ, நாட்களோ அல்லது வேதனையும் சஞ்சலமும் நிறைந்த சில வருஷங்களோ, அவர்களை மரணப் படுக்கையிலே கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டன; அவர்கள் மரணமடையும் போது சிநேகிதர்களெல்லாம் சுற்றி நின்று மனங்கலங்கிக் கண்ணீர் விட்டார்கள்; அவர்கள் பிரேதக் குழிகளுக்குத் தூக்கிக் கொண்டு போகப்பட்டார்கள்; ''சாம்பலுக்குச் சாம்பலும் தூசிக்குத் தூசியுமாய்'' போய்விட்டார்கள். மனுக்குலத்தின் முழு நிலைமையையும் நாம் ஆராய்ந்து பார்த்து எல்லா வியாதியும், துக்கமும், வருத்தமும், சங்கடமும், மரணமும், மனம் மற்றும் சன்மார்க்கத் தள்ளாட்டமும், ஆதாமின் மீறுதலினிமித்தம் ஏற்பட்டவை என்று நாம் நினைவு கூர்வோமானால், பாவத்திற்குக் கொடுக்கப்பட்ட தண்டனையானது, போதுமானதல்ல என்றும் நாம் சொல்வோமா? நித்திய காலமாய் பிசாசுகளின் சித்திரவதைகளுக்குட்பட்டு முடிவில்லாத வேதனையையும் சங்கடத்தையும் அனுபவிக்க, நரகம் என்ற ஓர் இடத்துக்கு இந்தக் கோடிக்கணக்கான ஜனங்கள் அனுப்பப்பட வேண்டுமென்று, நீதியானது சட்டப்படி நியாயமாய்க் கூறுகிறதென்றும், பகுத்தறிவுள்ள எந்த மனுஷனாவது சொல்வானா? சொல்லவே மாட்டான். ஆனால் அன்பான சிநேகிதரே! எந்த மனுஷனாவது அப்படிச் சொல்லுவானானால், அவன் பகுத்தறிவற்றவனாகவோ அல்லது பகுத்தறியும் சக்தியை இழந்தவனாகவோ இருக்க வேண்டுமென்று நமக்குப் புலப்படுகிறது.

## தேவன் கொடுத்த தண்டனை நீதியானதே

மரணதண்டனையானது அநீதியும் மகாகொடுமையு மானது என்று ஒருவரும் நினைக்கக்கூடாது. பாவியாகிய ஆதாமை இல்லாமலேயாக்கி, தமது தீர்ப்பை நிறைவேற்றி யிருக்கத் தேவனாலேகூடும். பாவஞ் செய்த நிமிஷமே மனுக்குலத்தை வேரறுக்க அவரால் கூடும். ஆனால் அது நாம் விரும்பத்தக்க காரியமாயிருக்குமா? நாம் அதை நல்லதென்று ஒப்புக் கொள்ளவே மாட்டோம். நமது ஜீவியம் எவ்வளவோ வேதனையும் சஞ்சலமும் நிறைந்ததாயிருந்தபோதிலும், நாம் ஜீவனோடிருக்கவே விரும்புகிறோம். ஜீவன் நமக்குச் சுகிர்தமாகவும் இன்பமாகவும் நம்மால் விரும்பப்படத்தக்கதாயும் இருக்கிறது. மேலும் ஒவ்வொரு மனுஷனும் தனித்தனியான பரீட்சையை அடையச் சிலாக்கியமுடையவனாகிறபொழுது, ஆதாம் பாவஞ் செய்யும் முன்னிருந்த ஆசீர்வாதமான நிலைமையை விட மேலான நிலைமையை ஒவ்வொரு மனுஷனும் அடைந்து கொள்ளப் பக்குவப்படுத்தப்படுவான்; அப்பொழுது தற்கால அனுபவங்களும் பரீட்சைகளும் ஒவ்வொரு மனுஷனுக்கும் சிட்சைகளாகவும் எச்சரிப்புகளாகவும் பிரயோ ஜனப்படுமென்பது தேவ தீர்மானம். தேவனுடைய இரக்கமும், மீட்பின் கிரியையும் இல்லாவிடின், சுயாதீனச் சிந்தனைக் காரராகிய சந்தேகவாதிகள் சொல்லுகிறபடி, நமது மனுக் குலத்துக்கு மறுமைக்குரிய நம்பிக்கைக்கே இடமிருக்காது.

நம்மை மீட்கும்படியாக நமது கர்த்தர் ஏன் மரித்தார் என்பதை மறுபடியும் கவனித்து, பாவத்திற்குரிய தண்டனை மரணமேயாகும் என்பதற்கு இன்னொரு ஆதாரத்தைக் கண்டறியுங்கள். நமக்கு விரோதமாய் நித்திய வேதனையானது தண்டனையாக நியமிக்கப்பட்டிருந்தால், நம்மை அதிலிருந்து மீட்கும்படி நமது கர்த்தரும் அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராய் நித்திய வேதனையையே அனுபவிக்க வேண்டியதாயிருந்திருக்கும். ஆனால் அது தண்டனையாயி ராததினால், இயேசுவும் நமக்காக அத்தண்டனையை அனுபவிக்கவில்லை. மரணமே தண்டனையானதால், ''கிறிஸ்து

நமது பாவங்களுக்காக மரித்தார். ''**தேவனுடைய கிருபையினால் அவர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்தார்.**'' (1 கொரி. 15 : 3; எபி. 2 : 9). ஆதாமின் மேல் விதிக்கப்பட்ட தண்டனையைச் செலுத்தக்கூடியவர், முழு உலகத்தின் பாவங்களுக்காகவும் தேவ நீதியைத் திருப்தி செய்யக்கூடியவ ரேயாவார். ஏனென்றால் ஆதாம் மாத்திரமே பரீட்சிக்கப்பட்டு அவன் மாத்திரமே ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டிருந்தான். அவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவன் மூலமாய் இந்த ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டோம்.

## தேவனுடைய ஞானமுள்ள சிக்கனமான ஒழுங்கு

இதோ நமது சிருஷ்டிகருடைய ஞானத்தையும் சிக்கனத்தையும் பாருங்கள்! கிறிஸ்துவாகிய இன்னொரு வருடைய கீழ்ப்படிதலின் மூலமாய் அவர் எல்லார் மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமை யினிமித்தம் முழு உலகத்தையும் அவர் மரணாக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தினார் என்று வேத புத்தகம் நமக்கு உறுதியாய்ச் சொல்லுகிறது. நமது சம்மதமில்லாமலும் நமக்குத் தெரியாமலும் நாம் மரணாக்கினைக்குட்பட்டோம். நமது சம்மதமின்றி நமக்குத் தெரியாமலே நாம் மரணத்தினின்று மீட்கப்பட்டோம். ''ஆகை யால் நமக்கு உத்திரவாதம் இல்லை என்று சொல்லலாமோ? தனித் தனியே அவரவர் செய்த பாவச் செயல்களுக்கு அவரவருக்குத் தனித் தனியே தண்டனை வராதோ?'' என்று ஒருவர் கேட்கலாம். அவரவர் செய்த கிரியைகளுக்குத் தக்கதாக எல்லாருக்கும் ''நீதியான பிரதிபலன்'' கிடைக்குமென்று நாம் விடையளிக்கிறோம். ஆனால் நமது நித்தியத்துக்கடுத்த தீர்ப்பானது, நாம் நாமே தேவ கிருபையை ஏற்றுக்கொள்வதிலும் அதைத் தள்ளிவிடுவதிலும் சார்ந்திருக்கிறது. ஒவ்வொரு பாவத்தையும் நாம் எவ்வளவு துணிகரமாய்ச் செய்கிறோமோ அந்த அளவுக்குத் தக்கதாக அது நம்மைத் தாழ்வடையச் செய்து, நாம் சீர்திருந்தத்தக்கதாக நமக்கு அடிகளையும், தண்டனைகளை யும், திருத்தத்திற்கான கடிந்து கொள்ளுதல்களையும் கொண்டு வருகிறதென்று வேத புத்தகம் தெளிவாய்ச் சொல்லுகிறது. (மத். 12 : 36; லூக். 12 : 47, 48). இவ்விதமாக ஒரு மனுஷன் எவ்வளவு கீழ்த்தரமாகவும் பொல்லாப்பாகவும் நடந்து கொள்ளுகி றானோ அவ்வளவாய் உயிர்த்தெழுதலின் காலத்தில், மிகவும் கஷ்டமும் பிரதிகூலமான நிலைமையும் இருக்கும். ஆதாமினால் இழக்கப்பட்டவைகளும் கிறிஸ்துவினால் மீட்கப்பட்டவை களுமாகிய சகலத்தையும் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு அவன் அதிகமாக போராட வேண்டியிருக்கும்.

நமது கர்த்தர் இப்பூமிக்கு முதலாம் தடவை வந்திருக்கையில் அவர் செய்த அற்புதங்கள், ஆயிர வருஷ அரசாட்சியில் அவரும் மகிமையடைந்த அவரது சபையும் உலகத்துக்காகச் செய்து முடிக்கும் மகத்தான வேலைக்கு முன்னடையாளங்களாயிருந்தன. அக்காலத்தில் வியாதியஸ்தர் எல்லாரும் முடவரும் குருடரும் மரித்தோரும் உயிர்ப்பிக்கப்பட்டுக் குணப்பட்டுச் சீரடைவார்கள். கீழ்ப்படிதலுள்ள அனைவரும் மானிட பூரணத்தை அடைவார்கள். கீழ்ப்படியாமை உள்ளவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தினால் அழிக்கப்படுவார்கள். (அப். 3 : 23).

## மரித்தவன் வெளியே வந்தான்

நமது கர்த்தர் செய்த அற்புதங்களில் மகா புகழ்பெற்ற அற்புதம் அவருடைய சிநேகிதனாகிய லாசருவை உயிரோடெழுப் பினதே ஆகும். லாசரு வியாதிப்பட்டிருக்கையில் இயேசுவானவர் பல நாட்களாக அவனைப் பார்க்கவரவில்லை. ஆனால் விஷயம் அவருக்குத் தெரியும். என்றாலும் மார்த்தாளும் மரியாளும், ''**ஆண்டவரே! நீர் நேசிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்**'' என்று சொல்ல அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள். (யோவா. 11 : 3). அவருடைய வாயின் வார்த்தையினாலேயே சுகமாக்க இயேசுவுக்கு வல்லமை உண்டென்பது அவர்களுக்குத் தெரியும். அந்நியர்களுக்கு உதவி செய்கிற அவர் தமது சிநேகிதனுக்கு சந்தோஷத்துடன் உதவிபுரிவார் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் அவர் உடனே வரவில்லை. அவர் இருந்த இடத்திலேயே பின்னும் இரண்டு நாட்கள் தங்கிக்கொண்டார். லாசரு சாகவும், அவனுடைய அருமையான சகோதரிகள் திகிலும் திகைப்பும் அடையவும் இடங்கொடுத்துவிட்டார். அப்புறம் அவர் தமது சீஷர்களை நோக்கி, ''**நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்**'' என்றார். (யோவா. 11 : 11). அப்புறம் அவர்களுடைய நிலைமையை அறிந்து, அவர் அவர்களை நோக்கி, ''**லாசரு மரித்துப் போனான்: நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்**'' என்றார். (யோவா. 11 : 21, 23, 24).

''*உன் சகோதரன் மரிக்கவில்லை, அவன் முன்னி ருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அதிகமான உயிரை அடைந்திருக்கிறான்; அவன் பரலோகத்திலோ, உத்தரிப்பு ஸ்தலத்திலோ இருக்கிறான்*'' என்று நமது கர்த்தர் சொல்லவே இல்லையென்பதைக் கவனியுங்கள். அப்படிப்பட்ட ஒரு வார்த்தையாவது அவர் வாயிலிருந்து புறப்படவில்லை. உத்தரிப்பு ஸ்தலத்தைப் பற்றிய போதனை அப்பொழுது ஏற்படவில்லை; அவருக்கு அதைப் பற்றி ஒன்றுமே தெரியாது. பரலோகத்தைப் பற்றி நமது கர்த்தருடைய வார்த்தையோ நமது தலைப்பு வாக்கியத்தில் காட்டப்பட்டிருக்கிறது; ''**பரலோகத்திலிருந்து இறங்கினவராகிய மனுஷகுமாரனே அல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை**'' (யோவா. 3 : 13 தமிழ் புதுத் திருப்புதல் காண்க). மார்த்தாளும் நன்றாய்ப் போதிக்கப் பட்டிருந்தாள். இருண்ட யுகங்களின் வஞ்சகங்களும் பொய் களும் அப்பொழுது தோன்றி சத்தியத்தை அகற்றிப் போட்டிருக்கவில்லை. தன் சகோதரனைப் பற்றி அவளுக்கிருந்த நம்பிக்கையானது முற்றிலும் வேத வசனத்துக்கு ஒத்ததாகவே இருந்தது. அதாவது ஆயிர வருஷ நாட்களில் ஏழாவது நாளும் ஆயிர வருஷ யுக நாளுமாகிய கடைசி நாளிலே அவன் உயிரோடெழும்புவான் என்பதே அவளுடைய நம்பிக்கை யாயிருந்தது.

உயிர்த்தெழுதலுக்குரிய வல்லமை தமக்கே உரிய தென்றும், அவர் அங்கே இருக்கிறபடியால் தாமதமில்லாமல் சகாயஞ் செய்து அவர்களுக்கு நேரிட்ட ஆபத்தை நீக்க முடியுமென்றும், நமது கர்த்தர் விளக்கிக் காட்டினார். மார்த்தாளோ கர்த்தரைப் பார்த்து ''**ரொம்பவும் பிந்திப் போய்விட்டது. இதற்குள்ளாக நாற்றமுண்டாயிருக்குமே**'' என்றாள். இயேசுவோ கல்லறையைப் பார்க்க விரும்பினார். அவர் கல்லறையினிடத்திற்கு வந்த

பொழுது, உரத்த சத்தமாய், ''**லாசருவே! வெளியே வா**'' என்று கூப்பிட்டார். ''**மரித்தவன் வெளியே வந்தான்**'' என்று நாம் வாசிக்கிறோம். (யோவா. 11 : 43, 44). வெளியே வந்தவன் உயிரோடிருந்தவனல்ல, உண்மையில் மரித்துப் போயிருந்த லாசருவே என்பதும், அவன் பரலோகத்திலிருந்தோ, உத்தரிப்பு ஸ்தலத்திலிருந்தோ அழைத்துக் கொண்டு வரப்படவில்லை என்பதும் பிரத்தியட்சப் பிரமாணங்கள்.

## ''பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும்''

லாசரு காரியத்தில் இயேசுவானவர் செய்தது போலவே, அப்படியே ஆதாமுக்கும் அவனுடைய முழுக்குலத்துக்கும் கடைசியாய்ச் செய்து முடிப்பார் என அவர் குறிப்பிட்டார். பின்வரும் அவருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''**பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய (இயேசுவினுடைய) சத்தத்தைக் கேட்டு வெளியே வருங்காலம் வரும்**'' (யோவா. 5 : 28, 29). இது நம்மைப் பிரமிப்படையச் செய்கிறதா? அப்படியானால் அதற்குக் காரணமென்ன? கண்டுபிடிப்பது நமக்குக் கஷ்டம் அல்ல. வேத போதனைகளினின்றும் விலகிப் போய் ''பிசாசுகளின் உபதேசங்களுக்குள்'' நாம் பூரணமாய் அமிழ்த்தப்பட்டுப் போனதே நாம் பிரமிப்படைவதின் காரண மாகும். ''**நீங்கள் சாகவே சாவீர்கள்**'' என்றும், ''**பாவத்தின் சம்பளம் மரணம்**'' என்றும் (ரோம. 6 : 23) தேவன் சொன்ன வார்த்தைகளைப் படித்தறிந்து ஒப்புக்கொள்ள மனமில்லாமல் ''**நீங்கள் சாகவே சாவதில்லை**'' என்று சர்ப்பம் சொன்ன பொய்யைப் பூரணமாய் நம்பி வந்திருக்கிறதினாலேயே இப்பொழுது நமக்கு வேத சத்தியம் அறிவிக்கப்படுகிறபொழுது நமக்கு வியப்பும் ஆச்சரியமும் ஏற்படுகிறது.

பிரேதக் குழிகளிலிருந்து வெளியே வருகிறவர்கள் எல்லாரும் பொதுவாக இரண்டு வகுப்பாராகப் பிரிக்கப்படுவார்கள் என யோவா. 5 : 29 விளக்கிக் காட்டுகிறது. தற்காலத்தில் தங்களுடைய பரீட்சையை அடைந்து அதை வெற்றிகரமாய் முடித்துத் தீர்த்தவர்கள் ஒரு வகுப்பாரும், தற்கால பரீட்சைக்குத் தேவ அங்கீகாரம் பெறத் தவறிப் போயிருக்கிறவர்களாகிய மீதியான மனுக்குலம் முழுவதும் மற்றொரு வகுப்பாருமாவார்கள். தற்காலத்தில் அங்கீகாரம் பெற்றவர்கள் பூரண ஜீவனாகிய உயிர்த்தெழுதலை அடைந்தவர்களாய் வெளியே வருவார்கள். தற்காலத்தில் தேவ அங்கீகாரம் பெறாதவர்கள் யாவரும் ''நியாயத்தீர்ப்புக்குரிய உயிர்த்தெழுதலை'' அடைய வெளியே வருவார்கள் (ஆக்கினை என்ற வார்த்தை தவறான மொழி பெயர்ப்பு. நியாயத்தீர்ப்பு என்ற பதமே சரியானது – ஆங்கில புதுத் திருப்புதல் வேதாகமம் காண்க).

வெளியே வருதல் ஒரு காரியம்; உயிர்த்தெழுதல் மற்றொரு காரியமாகும். ''***அவனவன் தன் தன் வரிசையில்***'' வெளியே வருவானென்று அப்போஸ்தலர் தெரிவிக்கிறார். (1 கொரி. 15 : 23). இவ்விதம் எழுப்பப்பட்ட பின்பு, தற்காலக் குறைபாடுகளினின்றும், அதாவது சரீரப்பிரகாரமான, மனம் சம்பந்தமான மற்றும் சன்மார்க்கக் குறைவுகளினின்றும், நீங்கி, தன்னுடைய சிருஷ்டிகரின் சாயலிலும் அவருக்கொப்பாகவும் ஆதாம் அனுபவித்து வந்த மகிமை பொருந்திய பூரண நிலைமையை படிப்படியாய் அடைந்து முன்னேற்றமடைதல் அவரவர்களைப் பொறுத்த காரியமாயிருக்கும். இழந்துபோன ஓர் நல்ல நிலைமைக்குத் திரும்ப எழுப்பும் வேலையை, அதாவது தாழ்ந்துபோன நிலைமையிலிருந்து மனுஷனை உயர்த்தும் வேலையை, ''***உலகத் தோற்றமுதல், தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைக ளெல்லாம் இழந்து போனதை திரும்பக் கொடுக்கப்படும் காலம்***'' என்று பரிசுத்த பேதுரு குறிப்பிடுகிறார்.(அப். 3 : 21– நிறைவேறித் தீருங்காலங்கள் என்பது சரியான மொழிபெயர்ப்பு அல்ல – times of restitution என்பதே சரியான மொழி பெயர்ப்பு – ஆங்கில பழைய புதிய திருப்புதல்கள் காண்க. நமது தமிழ் புதுத் திருப்புதலில் ''யாவும் சீருக்கு வரும் காலம்'' என்றிருப்பதைக் கவனிக்கவும்.)

## உலகம் முழுவதும் இரட்சிக்கப்படும் என்பது வேத போதனையல்ல

உலகம் முழுவதும் நித்திய ஜீவனை அடைவார்கள் என்பது மேற்கூறியவற்றின் தாற்பரியம் அல்ல; ஏனென்றால் ஆயிர வருஷ யுக அரசாட்சியில் கிடைக்கும் மேன்மையான வாய்ப்புகளைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள மறுக்கிறவர்கள் எல்லாரும் ஜனத்திலிராதபடி இரண்டாம் மரணத்தினால் நிர்மூலமாக்கப்படுவார்கள் என்று வேத புத்தகம் பிரசித்தப் படுத்துகிறது. அவர்கள் இராதவர்களைப் போலாவார்கள். (ஒப. 16; சங்.145 : 20; அப். 3 : 23).

''மரித்தோர் எங்கே?'' என்ற விஷயத்தைப் பற்றி நமது கர்த்தர் போதித்த போதனையை மறுபடியும் கவனியுங்கள். அவர் கப்பர்நகூம் ஜெப ஆலயத்துக்குள் பிரவேசித்தார். அவரை வாசிக்கும்படியாகக் கேட்டார்கள். அவர் ஏசாயா 61–ம் அதிகாரத்தை எடுத்து தம்மையும் தாம் செய்ய வேண்டிய வேலையையும் பற்றி வாசித்தார். அவருடைய வேலையின் ஓர்பாகம் சிறைச்சாலைக் கதவுகளைத் திறந்து சிறைப் பட்டவர்களை விடுதலை செய்வதேயாகும். யோவான் ஸ்நானகன் அடைக்கப்பட்டிருந்தது போன்ற இயற்கையான சிறைச்சாலை களை நமது கர்த்தர் திறக்கவில்லை என்பது நம்மெல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே. அவனுக்கு உதவிசெய்ய அவர் எவ்வகையிலும் முயலவில்லை. கிறிஸ்து திறக்கப்போகும் சிறைச்சாலை நமது மனுக்குலத்தில் சுமார் 3000 கோடிப்பேர் அடைபட்டுக்கிடக்கிற பிரேதக்குழியாகிய மகாபெரிய சிறைச் சாலையேயாகும். நமது கர்த்தர் இப்பூமிக்கு இரண்டாந்தரம் வந்திருக்கையில் இப்பெரிய சிறைச்சாலையைத் திறந்து, லாசரு விஷயத்தில் அவர் செய்தது போலவே, எல்லாக் கைதிகளையும் வெளியேறச் செய்வார். அவர் அவர்களைப் பரலோகத் திலிருந்தோ, உத்தரிப்பு ஸ்தலத்திலிருந்தோ, நரகத்திலிருந்தோ வரவழைக்காமல், ''**லாசருவே வெளியேவா**'' என்று அவர் கூறியதுபோல, அக்காலத்தில் தன் வேலையை நடப்பிப்பார். ஆகவே, ''***பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு வெளியே வருவார்கள்.***''

## மரித்தோர் எங்கே இருக்கிறார்கள்?

அருமையான சிநேகிதரே! உயர்ந்தது முதல் தாழ்ந்தது வரையுமுள்ள மானிடக் கல்விமான்கள் நமது கேள்விக்கு கொடுத்த மறுமொழிகள், இப்பிரதியில் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறதை நீங்கள் காண்கிறீர்கள். அவைகளில்

எதுவும் நமக்குத் திருப்தியளிக்கவில்லை. ‘‘மரித்தோர் எங்கே?’’ என்னும் கேள்விக்குத் தேவன் தமது வசனத்தின் மூலமாய்க் கொடுக்கிற சாட்சியையும் இப்பொழுது கேட்டிருக்கிறீர்கள்.

பரலோகத்திலிருந்து வரும் சத்தத்துக்குச் (தேவனுடைய வசனத்துக்கு) செவி கொடுப்பதினால், மரித்தோர் உண்மையில் மரித்துப் போயிருக்கின்றார்கள் என்றும், மறுமையைப் பற்றிய அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் முதலில் நமது கர்த்தராகிய இயேசு கல்வாரியில் செய்து முடித்த இரட்சண்யக் கிரியையிலும், இரண்டாவது அவரால் மீட்கப்பட்டவர்களுக்காக அவர் இரண்டாந்தரம் வந்திருக்கும் காலத்தில் செய்து முடிக்க வேண்டிய உயிர்த்தெழுதலின் வேலையிலும் நிலைநிறுத்தப் பட்டிருக்கின்றன என்றும் நாம் நிச்சயமாய் அறிகிறோம். இப்பொழுதே பரலோகத்திலிருப்பதாக நீ எண்ணின சகோ தரனோ, சகோதரியோ, தாயோ, தகப்பனோ, குழந்தையோ இவர்களைப் பற்றி நீ ஏமாற்றமடைந்துவிட்டதாக ஒரு வேளை எண்ணுவாயானால், உனக்கு ஆறுதல் உண்டாகத்தக்கதாக இவ்விஷயத்தை மொத்தமாய் எடுத்துச் சீர்தூக்கிப்பார். உன் சிநேகிதர், சத்துருக்கள், இனத்தார், அயலகத்தார் ஆகிய கோடிக்கணக்கான ஜனங்கள், உன்னுடைய கொள்கையின்படி அவர்களுடைய மரணமுதல் சொல்லமுடியாத வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களென்றும், அதுவும் அநேக நூற்றாண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களென்றும் சொல்லுவதைக் கவனித்துப்பார். மரித்தோர் எங்குமே உயிரோடிராமல் மரண நிலையிலிருக்கிறார்களென்றும், அவர்கள் இயேசுவுக்குள் நித்திரை செய்கிறார்களென்றும், அவர் அவர்களுடைய மீட்பராயிருக்கிறபடியால், மறுமையில் அவர்கள் விழித்தெழுந்திருப்பார்களென்னும் நம்பிக்கை அவர் மேலேயே உள்ளது என்றும் அறிந்து கொள்ளுகிற சத்தியமாகிய அறிவின் மூலமாய் நீ அடையும் மன ஆறுதலைச் சிந்தித்துப்பார்.

## தேவனை முன்னிலும் அதிகமாய் நன்கு மதித்தல்

நாம் வெகு காலமாகக் கொண்டிருந்த தப்பான கொள்கைகளை இப்பொழுது தள்ளிப் போட்ட போதிலும், அவைகள் ஒருபோதும் சிறப்பானவைகளாகவோ, நியாயமானவைகளாகவோ, வேத புத்தகத்துக்கு இசைவானவைகளாகவோ இருந்ததில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். ‘‘மரித்தோர் எங்கே?’’ என்ற இந்த சிறப்புள்ள கேள்விக்கு விடையாக வேத புத்தகம் போதிக்கிற போதனைகளை நாம் இப்பொழுது தேவ கிருபையினால் அறிந்து கொண்டதற்காக நாம் சந்தோஷமடைய வேண்டாமா? நமது இருதயங்களிலிருந்து தப்பறையாகிய பொய் மறைந்ததும், அதற்குப் பதிலாக நமது தேவனுடைய உண்மையான குணத்தை அல்லது ஏற்பாட்டைப் பற்றி நன்கு மதிப்பும் முன்னைவிட அதிகத் தாழ்மையோடும் முழுமனதோடும் ஊக்கத்தோடும் அவருக்கு ஊழியஞ் செய்ய விருப்பமும் நமது இருதயங்களில் உண்டாக வேண்டும். தேவனுடைய வசனமாகிய வேத புத்தகத்துக்கு நாம் முன்னிலும் அதிக மேன்மையான மதிப்பையும் கனத்தையும் கொடுக்க வேண்டும். ஒருபுறம் சிநேகிதர்களாலும் மறுபுறம் விரோதிகளாலும் அப்புத்தகம் தப்பிதமாய் விவரித்துக் காட்டப்பட்ட போதிலும், அதுவோ எப்பொழுதும் ‘‘உண்மையை சொல்பவனாக’’ இச்சிறப்புள்ள செய்தியை (மரித்தோரைப் பற்றிய விஷயத்தை) நியாயத்துடன் எடுத்துக் காட்டி, அநேக நூற்றாண்டுகளாக அது உலகத்திற்கு முன்பாகக் கெட்டுப் போகாமல் நிலைத்திருக்கிறதென்கிற சத்தியமே, நாம் இனி அதின் போதனைகளைக் கவனமாய் ஒப்புக்கொள்ளத் தீர்மானம் பண்ணுவதற்குத் தகுந்த காரணமாயிருக்கிறது.

இப்பிரசுரத்தை வாசிக்கிறவர்கள் கர்த்தருக்குத் தங்களை அர்ப்பணித்தவர்களாய் இருப்பார்களாயின், அவர்களுக்கு நாம் பின்வரும் வார்த்தைகளை ஆலோசனை யாகக் கூறுகிறோம்:- உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; நீங்கள் பங்காளிகளாக்கப்பட்டிருக்கிற அழைப்பின் மகிமை பொருந்திய பரிபூரணத்தை முன்னிலும் அதிகமாய் உற்றறிந்து அதை நிச்சயப்படுத்துங்கள். தேவனுடைய அன்பும், கிறிஸ்து வினுடைய அன்பும் உங்களை நெருக்கி ஏவுவதாக; இயேசுவின் உண்மையான சீஷர்களாயிருப்பீர்களாக, பாரமான யாவற் றையும் உங்களைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிப்போடுங்கள். உங்களுக்கு நியமித்திருக்கிற பந்தய ஓட்டத்தில் பொறுமையோடே ஓடி முடிவுவரைக்கும் தைரியத் தோடே இலக்கை நோக்கித் தொடருங்கள். ***

இயேசு கூறின ஐசுவரியவான்–லாசரு என்ற உவமையைப் பற்றியும் அதன் விளக்கத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள எங்களுக்கு எழுதுங்கள். இலவசமாக ஒரு பிரதி அனுப்பித்தருகிறோம்.

*இப்பத்திரிக்கையில் அடங்கிய வேத போதனைகளை இன்னும் அதிக தெளிவாகவும் விபரமாகவும் அறிய விரும்புகிறவர்கள் கீழ் காணும் விலாசத்தில் தொடர்பு கொண்டு, 516 பக்கங்களைக் கொண்ட “**யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு**” என்னும் புத்தகத்தை வாங்கி வாசித்தறிந்து கொள்ளலாம்.*

***For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines***

*Contact :*

**Bro. V. Vincent Jeyakumar**
**(Representative of India)**
**Laymen's Home Missionary Movement**
32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

